# இளைய தலைமுறைக்கேற்ற இனிய இல்லங்கள்

# சிம்பனி ஹைட்ஸ்

## வெ. 500 முன் பணம் செலுத்தி வீடுகளை வாங்கலாம்

## இலவச சட்ட ஒப்பந்தம்-வங்கிக் கடனுதவிக்கு ஏற்பாடு

வீடு என்பது பலருக்கு ஒரு கனவு. நாம் வாங்கும் வீடு இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை பலர் ஒரு வாழ்நாள் கனவாக வைத்திருப்பதுண்டு. சிறுகச் சிறுக வீட்டுக்காகவே சேமிப்பவர்களும் உண்டு.

அந்தச் சேமிப்புக்கு ஓர் அர்த்தத்தைத் தருவதுதான் ஒரு திருப்தியான வீட்டை வாங்கி விட்டோம் என்பது. வாங்கும் வீடு பெரிதல்ல. அந்த வீடு மனத்துக்கு ஏற்ற இனிய இல்லமாய் விளங்குவதுதான் முக்கியம்.

அந்த வகையில் வீட்டுடைமைத் துறையிலும் சொத்துடைமைத் துறையிலும் கால் பதித்து சுமார் 31 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து இன்று செலாயாங்கில் சிம்பனி ஹைட்ஸ் (Symphony Heights) என்ற இனிய இல்லங்களை உருவாக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளது ஹுவாயாங் பெர்ஹாட் நிறுவனம்.

### இளையவர்களுக்கேற்ற இனிய வீடுகள்

இன்றைய சூழ்நிலையில் குறிப்பாக இளைய தலைமுறையினர் தங்கள் வீடுகளைத் தேர்வு செய்வதில் முற்றிலும் மாறி வருகின்றனர். கச்சிதமான - சொகுசான வசதிகள் இருக்கின்ற வீடுகளை இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் விரும்புகிறார்கள்.

அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே மேடான் செலாயாங்கிற்கு அருகில் இந்த ஆடம்பர அடுக்குமாடி வீடுகளைக் கட்டி வருகிறோம் என்று அந்த நிறுவனத்தின் தலைமை நடவடிக்கை அதிகாரியும் நிர்வாக இயக்குநருமான ஹோ வென் யான் அண்மையில் மக்கள் ஓசைக்கு வழங்கிய ஒரு சிறப்புப் பேட்டியில் கூறினார்.

மொத்தம் 3 கட்டடத் தொகுதிகளாக (புளோக்குகள்) இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. முதல் தொகுதியில் 29 மாடிகளும் இரண்டாவது தொகுதியில் 30 மாடிகளும் 3ஆவது தொகுதியில் 33 மாடிகளும் அமைகின்றன.

மூன்று அறைகள், 2 குளியலறைகள் கொண்ட வீடுகள் தனியாகவும் 2 அறைகள், 2 குளியலறைகள் கொண்ட வீடுகள் தனியாகவும் தற்போது விற்பனைக்கு உள்ளன என்று அவர் சொன்னார்.

பத்துகேவ்ஸ் வட்டாரத்தில் உள்ள செலாயாங் உட்பட அதன் சுற்றுப்பகுதிகள் ஒவ்வொரு நாளும் அதிவேகமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன. குறிப்பாக, கிள்ளான் பள்ளத்தாக்கைச் சேர்ந்த மக்களுக்கு இது ஒரு மைய இடமாக விளங்குகிறது.

### வெ. 500இல் முன்பதிவு

இந்த வீடுகளை 500 வெள்ளி செலுத்தி முன் பதிவு செய்து கொள்ளலாம். எஞ்சிய தொகைகளுக்கு 100 விழுக்காடு வரை வங்கிக் கடனுக்கும் மனு செய்யலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்த வங்கிக் கடனுக்கு நிறுவனமே ஏற்பாடு செய்யும். கோலாலம்பூர் நகர மையத்திற்கும் டாமன்சாரா - பெட்டாலிங் ஜெயாவிற்கும் 15 நிமிடங்களில் சென்றடையப்பிரதான சாலைகள் இதைச் சுற்றியுள்ளன.

இந்தச் சாலைகளுக்கு டோல் கட்டணம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று ரேப்பிட் கேஎல், மெட்ரோ பேருந்து, கேடிஎம் வசதிகளும் இங்கு இருக்கின்றன.

எம்ஆர்ஆர் 2, ஜாலான் ஈப்போ, எஸ்டிபி, என்கேவிஇ, காராக் நெடுஞ்சாலை, டியூக் நெடுஞ்சாலை வடக்கு - தெற்கு நெடுஞ்சாலை, கோலாலம்பூர் - சிரம்பான் நெடுஞ்சாலை, கெசாஸ் நெடுஞ்சாலை ஆகியவற்றை எளிதில் இணைக்கும் மையப் பகுதியில் இந்தத் திட்டம் அமைகிறது.

### பள்ளிகள், விற்பனை மையங்கள்

இந்தத் திட்டத்திற்கு அருகில் ஜெயன்ட் பத்துகேவ்ஸ், தெஸ்கோ எக்ஸ்ட்ரா, செலாயாங் மால், செலாயாங் கெப்பிட்டல் ஷோப்பிங் சென்டர் போன்ற முக்கியப் பேரங்காடிகளும் அருகில் உள்ளன.



இவை தவிர, ஃபிரிம் (கட்டுப்படுத்தப்பட்ட வனப்பகுதி), டெம்ப்ளர்ஸ் பார்க், பத்துமலை ஆகிய பகுதிகளுக்கு அருகில் இது அமைந்திருக்கிறது. வங்கிகள், பள்ளிகள், மருத்துவமனைகள் இப்படி எல்லா அடிப்படை வசதிகளும் ஆங்காங்கே அருகருகே அமைந்துள்ளன.

புதிதாகத் திருமணம் செய்த தேனிலவு தம்பதியர் திருமணத்திற்குப் பின்னர் வீடு வாங்க நினைக்கின்றவர்கள் அவர்களின் மனத்துக்கேற்ப இனிய இல்லங்கள் இவை என்று வர்ணிக்கிறார் ஹோ.

கடந்த 1978ஆம் ஆண்டு டிசம்பர் 28ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்நிறுவனம், 1979ஆம் ஆண்டு ஹுவாயாங் டெவலப்மெண்ட் சென்டிரியான் பெர்ஹாட் நிறுவனமாக விளங்கியது. இதன் பின்னர் 2001ஆம் ஆண்டு செப்டம்பர் 4ஆம் தேதி ஹுவாயாங் என்று அது பெயர் மாற்றம் பெற்றது.

பங்குச் சந்தையில் இடம்பெற்று இன்று அதன் 500 முதன்மை நிறுவனங்களில் ஒன்றாக விளங்குகிறது.

1978ஆம் ஆண்டு ஹோ மொக் ஹெங் என்பவரின் லட்சியத்தில் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. முதன் முறையாக 24 லட்சத்து 40,000 வெள்ளிச் செலவில் ஈப்போ, ஜாலான் கோப்பெங்கில் 8 நான்கு மாடிக்

13ஆம் பக்கம் பார்க்க...



### 16ஆம் பக்கத் தொடர்ச்சி...

கட்டடங்களை இந்நிறுவனம் அமைத்தது. அதன் பின்னர் 1982ஆம் ஆண்டு ஈப்போவில் உள்ள சிம்பாங் பூலாய், தாசேக், பெர்ச்சாம், லாகான் ஆகிய இடங்களில் பல்வேறு திட்டங்களில் அது ஈடுபட்டது. 1992ஆம் ஆண்டு தாமான் ஸ்தாப்பாக் ஜெயா என்ற பெயரில் கிள்ளானில் ஒரு வீடமைப்புத் திட்டத்தில் அது இறங்கியது.

1993ஆம் ஆண்டு ஈப்போ - லூமுட் நெடுஞ்சாலைக்கு அருகில் 838 ஏக்கர் நிலத்தை வாங்கி பண்டார் யூனிவர்சிட்டி ஸ்ரீ இஸ்கண்டர் என்ற ஒரு நகர மேம்பாட்டுத் திட்டத்தை அது உருவாக்கியது. இதன் பின்னர் 1998ஆம் ஆண்டு ஜோகூர் மாநிலத்தில் 371 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனம் வாங்கியது. 2004ஆம் ஆண்டு 106 ஏக்கரில் தாமான் கூலாய் இண்டா என்ற வீடமைப்புத் திட்டத்தை அது வெற்றிகரமாக மேற்கொண்டது.

2003ஆம் ஆண்டு 3 முழு கிளை அலுவலகங்களுடன் நாடு தழுவிய நிலையில் நான்கு இடங்களில் அது தனது மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொண்டது.

ஒரு நம்பகமான நிறுவனமாகவும் சொல்லும் செயலும் 100 விழுக்காடு சரியாகவும் செயல்படும் தங்கள் நிறுவனம் செலாயாங்கில் அமைத்து வரும் சிம்பனி ஹைட்ஸ் சொகுசு வீடுகளை நம்பி வாங்கலாம். மலேசிய இந்தியர்கள் இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முன்வாருங்கள் என்று அழைக்கிறோம்.

நீச்சல் குளத்துடனும் இன்னும் பிற வசதிகளுடனும் உள்ள இந்த வீடுகளின் மாதிரிகளை நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்புக்கு: தலைமை அலுவலகம்:
C-21, Jalan Medan Selayang 1,
Medan Selayang, 68100 Batu Caves, Selangor.
Tel: 03-61884488, Fax: 03-61884487
E-mail:kl@huayang.com.my Website:www.huayang.com.my

HUAYANG

Makkal Osai 18 Jul 2009